மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஐந்து ஏக்கர் நிலம், பத்தாயிரம் ரூபாய் தரவேண்டும் என்ற ஒரு நிபந்தனைதான் விதிக்கப்பட்டு வருகிறது. ஐந்து மைல் சுற்று வட்டாரத்தில் வேறு எந்த உயர்நிலைப் பள்ளியும் இல்லாமலிருக்க வேண்டும், வேறு உயர்நிலைப்பள்ளி பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். உயர்துவக்கப்பள்ளி உயர்நிலைப்பள்ளியாக வருவதற்கு ஏற்ற அளவு மாணவர்களின் எண்ணிக்கை பெருக வேண்டும். இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டுவிட்டால் உயர்நிலைப்பள்ளிக்கு அனுமதி வழங்கப்படும்.

காளி கிராமத்துக்கு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம்

*678 வினு—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தாலுக்கா, காளி கிராமத்தில், காளி ஆரம்ப சுகாதார நிலையத்துக்காக புதிய கட்டடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் இதுவரை கட்டடம் கட்டுவதற்கு ஆரம்ப ஏற்பாடுகள் எதுவும் செய்யப் படாமல் இருப்பதற்குக் காரணங்கள் யாவை?

(இ) எப்பொழுது முதல் கட்டட வேலை துவங்கப்பெறும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) நிதி பற்றுக்குறையால் கட்டிடம் கட்டுவது எடுத்துக் கொள்ளப்பட வில்லை.

பத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுவதற்கு ஒரு குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது. காளி சுகாதார நிலையம் பற்றியும் பரிசீலிக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாயூரம் தாலுக்கா, காளி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்காகப் பொதுமக்கள் எத்தனை ரூபாய் பங்குத்தொகை கட்டியிருக் கிறார்கள்? கட்டியது போக பாக்கித் தொகை ஏதேனும் கட்டப் படவேண்டியிருக்கிறதா? அதனைக் கட்டிவிட்டால் விரைவில் இந்த ஆண்டுக்குள்ளேயே அது செயல்படத் தொடங்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் வைப்பதற்கு ஐந்து ஏக்கர் நிலமும் பத்தாயிரம் ரூபாயும் கட்டவேண்டும் என்ற விதியிருக்கிறது. ஆனால், அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டதால் இது நிறை வேற்றப்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன். பல ஆண்டு காலத்திற்கு முன்பே அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டது. இப்பொழுது முப்பது ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டப் படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் பத்து சுகாதார நிலையங்களுக்கு அனுமதி வழங்க இருக்கும் காரணத்தால் அவற்றுடன் இதுவும் சேர்த்துக் கவனிக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1970 ஏப்ரல் 4]

திரு. எம். சுரேந்திரன் : ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஐந்து ஏக்கர் நிலமும் பத்தாயிரம் ரூபாயும் தந்தால் கட்டப்படும் என்று அமைச்சரவர்கள் கூறினர்கள். இதுபோன்ற நிபந்தனைகள் முழுவதும் பூர்த்தி செய்யப்பட்டும் கூட, வருடக்கணக்கில் இன்னும் கட்டப்படாமலிருக்கும் நங்கவள்ளி சுகாதார நிலையத்தைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டபடி, இடையில் நிதிப் பற்றுக்குறை காரணமாகவும், நெருக்கடி நிலையின் காரணமாகவும் கட்டடங்கள் கட்டுவது நிறுத்திவைக்கப்பட்டது. நெருக்கடி நிலை தீர்ந்தது. ஆனல், நிதிப் பற்றுக்குறை காரணமாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது. இந்த ஆண்டு முப்பது ஆரம்ப சுகாதார நிலையங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும் பத்து எடுத்துக் கொள்ளுவதற்கு அண்மையில் அதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. நங்கவள்ளி ஆரம்ப சுகாதார நிலையம் பற்றிய சூழ்நிலை தெரியவில்லை. எங்கெங்கே ஐந்து ஏக்கர் நிலமும், பத்தாயிரம் ரூபாயும் தரவேண்டும் என்கிற நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவோ அவற்றிற்கு முதலிடம் தந்து, அவற்றை எடுத்துக்கொள்ளலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படி எடுத்துக்கொள்ளும் வகையில், எந்த மாவட்டங்களில் அஸ்திவாரம் போட்டும், கட்டடங்கள் கட்டாமல் இருக்கின்றனவோ அந்த மாவட்டங்களில் எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறியிருக்கிறது. எடுத்துக்கொள்ளும் பட்டியலில் நங்கவள்ளி இணைந்திருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் அதனுடைய விவரம் தெரிவிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா : இந்த காளி கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்காக அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் பங்குத் தொகை கட்டியிருப்பதாகச் சொல்கிறுர்கள். அது எந்தளவிற்கு உண்மை என்பதை அறியலாமா ? அது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மூன்று ஆண்டுகளாகக் கேட்டும்கூட சரியான தகவல் கிடைக்காததால் அதைப் பற்றி தயவுசெய்து அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதன் அடிக்கல் 23—6—1958-ல் போடப்பட்டதாக மட்டும் குறிப்பு இருக்கிறது. பணம் கட்டியது பற்றிய குறிப்பு இல்லை. தனியாக அறிந்து சொல்லப்படும்.

கடியாபட்டி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம்

*679 வினு—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—